30th October 1962]

தொகை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். எலெக்ட்ரிஸிடி போர்ட், அதை அவர்கள் பரிசீலனை செய்து அவ்வளவு கொடுக்க அவசியமில்லை என்று அவர்கள் ஒரு தொகை சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதுபற்றி பேச்சுவார்த்தை நடந்துக்கொண்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எலெக்ட்ரிஸிடி போர்ட் நிலக்கரியை உபயோகப்படுத்தி உற்பத்தியாகும் மின்சாரத்தை விட அவர்கள் கேட்பது அதிகமாகயிருக்கிறதா ? அப்படியானால் எவ்வளவு அதிகமாகயிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் "ஒரு தொகை" என்று சொன்னேன். அந்தத் தொகையை சொல்லவேண்டாமென்று அப்படிச் சொன்னேன். இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னால் தொகை எவ்வளவு என்று தெரிந்து விடும். அதைச் சொல்வதற்கில்லை.

தொழிற்பேட்டை (விருத்தாசலம் தாலூக்கா)

950-எஸ். கேள்வி—**திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலூக்காவில் தொழில் பேட்டைகள் நிறுவ திட்டம் உண்டா ?

(இ) அப்படியானால் எப்போது ஆரம்பிக்கப்படும்.

(உ) அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ)—Yes, Sir. There is a proposal to start an Industrial Estate for Ceramic Industry at Vridhachalam.

(இ)—The Industrial Estate is expected to start functioning by the middle of 1963.

(உ)—Rs. 32,77,994.

மருத்துவக் கல்லூரிகள் (சேர்த்துக்கொள்ளுதல்).

950-டி. கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்குவந்த மொத்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் நிராகரிக்கப்பட்டவை எத்தனை ?

(உ) கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(எ) அவர்களில் (1) அரிசன மாணவர்கள், (2) பின்தங்கிய மாணவர்கள் எத்தனை பேர் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) 2,647.

(இ) 2,054.

(உ) 593.

(எ) (1) 95.

(2) 269.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் (மருத்துவ வசதி)

950-யு. கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக தோட்ட அதிபர்கள் நடத்தும் மருத்துவச் சாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எப்போது முதல் ?

[30th October 1962

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சமீபத்திலே ஒரு ஆர்பிட்ரேஷன் தீர்ப்பு வழங்கியதில் இந்த ஆஸ்பத்திரிகளை அரசாங்கமே நடத்தவேண்டும், இந்த ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வாங்குவதில், ஜில்லா வைத்திய அதிகாரிகள் மருந்துகளுக்கு இன்டெண்ட் கொடுப்பது, டாக்டர்களை மாற்றுவது முதலிய வற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வந்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. பொன்னையா : அநேகமாக தோட்ட அதிபர்கள் எல்லாம் ஒவ்வொரு எஸ்டேட்டிலும் ஆஸ்பத்திரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு நவீனக் கருவிகளோ ஆயுதங்களோ கிடையாது. பெரிய விபத்து, மேஜர் ஆப்பரேஷன் என்றால் தூரத்தில், கோவை நகரத்திற்குத்தான் நோயாளிகளைக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. ஆகவே தோட்ட அதிபர்கள் ஒன்று சேர்ந்து மையமான ஒரு இடத்தில் ஆஸ்பத்திரி வைத்து அங்கு நவீனக் கருவிகள், ஆயுதங்கள் இவையெல்லாம் வைக்கலாம். அதுபற்றி முதலாளிகளிடம் அரசாங்கம் சிபார்சு செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ப்ளான்டேர்ஸ் எல்லோரும் சேர்ந்து டிஸ்பன்ஸரீஸ் வைக்க கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னென்ன சலுகைகள் செய்யவேண்டுமென்று எழுதிக் கேட்டால் அது கவனிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், குரூப் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் தோட்ட அதிபர்கள் கார்டன் ஆஸ்பத்திரி என்று சொல்லக்கூடிய சிறு சிறு ஆஸ்பத்திரிகளை வைத்துக்கொண்டு, தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றிக்கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே, சட்டப்படி குரூப் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி செய்யுமா ? அப்படி செய்யும்படி அந்தத் தோட்ட அதிபர்களை அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 200 தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திலே எல்லாம், தோட்ட அதிபர்கள் எல்லோரும் கண்டிப்பாக இப்படிப்பட்ட குரூப் ஆஸ்பத்திரிகளை வைத்தாக வேண்டுமென்று சட்டத்திலே ப்ரொவிஷன் வைத்திருக்கிறோம்.

குடிதண்ணீர்த் திட்டம் (திருச்செங்கோடு).

950-வி. கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு குடிதண்ணீர் திட்டத்திற்கு அரசாங்கம் கடனுதவி செய்ய முடிவெடுத்துள்ளதா ?

(இ) எப்போது அந்த முடிவு அந்த பஞ்சாயத்திற்கு அறிவிக்கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) ஆம், ஐயா.

(இ) சென்ற (1962) ஜூலை மாத முதல் வாரத்தில்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நடக்க இருந்த தேர்தலுக்காக இந்த தண்ணீர்த் திட்டம் அனுமதிக்கப்பட்டதா ? எப்போதிருந்து அந்த பஞ்சாயத்து இந்தத் தண்ணீர்த் திட்டத்தை துவக்க வேண்டுமென்று கேட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.